நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



ஜனகரது வில்லொடித்துச் சீதையினைப் பெற்ற
தவக்கடலே ! சீராமா ! தனவணிகர் நாட்டில்
அநியாய முறைச்சிட்டை மாமியார் சாமான்
அந்தவில்லை ஒடித்திடவோர் அவதாரம் காண்பாய்.

மே 1992



திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக தமிழ்ப் புத்தாண்டு அன்று (13-4-92) நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் பட்டிமன்றத்தின் நடுவர் டாக்டர் திருமதி சரசுவதி இராமநாதன், சங்கத் தலைவர் திரு. எஸ். ஒ. ஆர்எம். கணபதி செட்டியார், சிறப்பு விருந்தினர் திரு. வி. என். சிடி., சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. லெ. நா. லெட்சுமணன்.

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 4

ஆங்கிரஸ

சித்திரை

மே

1992

ஓதக் கடலில் ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப் பவளமும் சந்தக் கரிவளையும்
மாதக்க வென்று வருணன் விடுத்தான்
சோதிச் சுடர்முடியாய் ! தாலோ தாலோ
சுந்தரத் தோளனே ! தாலோ தாலோ.

— பெரியாழ்வார்.

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00



கோவிலூர் சுவாமிகளின் ஆசியுரை !

விஞ்ஞான யுகத்தின் வீர சாகசங்களை நேரில் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கும் நாம், இவ்வுலகில் நம்மால் முடியாதது எதுவும் இல்லையென்று நினைத்து வருகிறோம். ஆனால் வாழ்க்கையில் நாம் பெறுகின்ற அனுபவங்கள் நமது நம்பிக்கையை வளர்க்கக் கூடியதாக இல்லை. முற்காலத்தில் நம்மை ஆண்டு அச்சுறுத்தி வந்த இயற்கையின் பல சக்திகளை விஞ்ஞான சக்தியால் நாம் இன்று ஓரளவிற்கு வென்று விட்



டோம் என்றாலும் மனதிற்கு நித்தியமான அமைதியை அளிக்கின்ற எதையும் இந்த விஞ்ஞானத்தால் படைக்க முடியவில்லை என்பது ஏமாற்றத்திற்குரிய செய்தியாகும்.

பல வினாக்களுக்குப் பதில் கூற விஞ்ஞானம் தயக்கம் காட்டும் இவ்வேளையில் சான்றோர்கள் தெள்ளத் தெளிவாக, நமக்கு விடையளித்து நம்மைச் சகலவிதமான துயரங்களிலிருந்தும் விடுவித்துள்ளார்கள். அவற்றைப் பார்க்கும்போது அவர்கள் சொல்லுகின்ற வழிகள் சரியான வழிகள் என்று நாம் நம்புகிறோம். செல்லவேண்டிய இடத்திற்கு நாம் பாதையின் வரைபடத்தைப் பயன்படுத்தினரல் மிகவேகமாக அங்கு சென்றுவிடலாம். ஆனால் வரைபடம் இல்லாவிட்டால் தட்டுத் தடுமாறி, வழிமாறி பயணம் தொடரவேண்டிய நிலைக்கு வந்து விடுகிறோம். இச்சமயத்தில் திரை காட்டுகின்ற எந்திரம்போல் மகான்களின் வார்த்தைகள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன.

ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தை அருளிய போது தம்மை ஆட்கொண்ட பரமனின் கருணா ரசத்தை பிரதிபலிக்கும்படி செய்து விட்டார். திருவாசகம் எனச் சொல்லப்படும் தேனாகிய மருந்தானது துன்பத்திற்குக் காரணமான அறியாமையை அறுத்து அறிவுடைமையைத் தந்து இன்பத்தைப் பெறச் செய்கின்றது. அடிகள் இறைவன்பால் பெற்ற உபதேசத்தின் விளைவே திருவாசகமாம்.

நம் வாழ்க்கையில் கடவுள் அருளிய வரப்பிரசாதமே ஐம்புலன்கள். இவைகளை நாம் வாழ வைத்தால் அவைகள் நம்மையும் வாழவைக்கும். அதனால்தான், 'நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!' என்று சிவபுராணத்தைத் துவக்கியுள்ளார், மாணிக்கவாசகப் பெருமான்.

உலகத்தில் இருக்கும் அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும்

அன்பு படுத்திய பாடு !

கண்ணபிரானை விதுரன், தன் இல்லத்தில் வரவேற்றான். கண்ணனை ஒரு ஆசனத்தில் அமரச் செய்தான். தன் தோட்டத்தில் விளைந்த பழுத்த வாழைப் பழங்களை எடுத்துவந்து அவர்முன் வைத்து சாப்பிடுமாறு சொல்லி அன்போடு கண்ணன் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருக்கிறான். கண்ணனும் விதுரனையே பார்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். சற்று நேரத்தில், நிற்கும் விதுரன் தன் காலில் வாழைப்பழம் மிதிபடுவதை உணர்ந்து கீழே பார்க்கிறான். பழம் முழுவதும் உரித்தபடி கீழே கிடக்கிறது. தோல்களைக் காணவில்லை. ''கண்ணா என்ன காரியம் செய்தாய்? அன்பினால் நான் உன்னையே பார்த்துக் கொண்டிருந்தேன். நீயோ பழங்களைக் கீழே போட்டுவிட்டு தோல்களையே உண்கிறாயே.. இது பொருத்தமா?'' என்றான் விதுரன். ''நானும் உன்னைப்போல் அன்பினால் உன்னையே பார்த்துக் கொண்டிருந்ததால் நான் உண்பது தோலா பழமா என்ற வேறுபாடே எனக்குத் தெரியாமல் போயிற்று'' என்றான் கண்ணன்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(பாளையங்கோட்டையில் 29-3-92 அன்று நடைபெற்ற கம்பன் கழக விழாவில்.)

அதொன்றும் சாத்தியமான காரியம் அல்லவே! அதுமட்டுமல்லாமல், யோக வாழ்க்கை கெடுதியைத்தான் விளைவிக்கும். மனம் கெட்டால் மனிதன் கெடுவான். இந்த மனத்தின் போக்கில் ஐம்புலன்களைச் செலுத்த நாம் அனுமதித்தால் நம்முள் இருக்கும் கடவுளை நாமே அவமதிப்பது போலாகும். எனவே உடல், மனம், புத்தி இவை மூன்றுக்கும் எந்தவிதத் தீங்கும் வராதபடி ஐம்புலன்களை நாம் வாழ வைக்க வேண்டும். இதற்குப் பயிற்சி தேவைதான். கலியுகத்தில் கடவுளின் நாமங்களை நிரந்தரமாக உச்சரித்து சர்வலோகங்களிலும் நிறைந்திருக்கும் கடவுளை நம் வசமாக்குவது தான் இதற்கு வழி என்பதை மாணிக்கவாசகப் பெருமான் சுய அனுபவத்தின் பிரதிபலிப்பாக சிவபுராணத்தைத் தந்துள்ளார். சிவபுராணம் மாணிக்கவாசகப் பெருமானின் சொரூபமே.

திருவாசகம்தான் மாணிக்கவாசகப் பெருமான். சிவபுராண வடிவத்தில் மாணிக்கவாசகப் பெருமான் நம்மிடையில் உலா வருகிறார். அவர் சொன்ன பக்தி நெறியை நமது மனதில் நிரந்தரமாக தக்கவைக்க, எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர், திருநெல்லைத்தாயின் திருவருளால் அனைவரும் உடல் நலனும், மன நலனும் சர்வ ஐஸ்வர்யங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

(கோவிலூரில் 11-4-92 அன்று நடைபெற்ற சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள் ஆற்றிய ஆசியுரை.)

குருவிக்கொண்டான் பட்டியில் குட நீராட்டு விழா

குருவிக்கொண்டான்பட்டி நகரச் சிவன் கோவிலில் திருப்பணிகள் செய்து, வரும் ஆவணி மீ 17வ (2–9–92) குட நீராட்டு நடைபெற உள்ளதாக நடப்புக் காரியக்காரர் திரு. கி.சீனிவாசன் செட்டியார் அவர்கள் தெரிவிக்கிறார்கள். திரு. அ. மு. சித. முத்தையா செட்டியார் அவர்களைத் தலைவராகவும், திரு. எம். பழனியப்பனைச் செயலாளராகவும் கொண்ட குட நீராட்டுக் குழுவும் திரு. கே ஆர். அண்ணாமலை அவர்களைத் தலைவராகக் கொண்ட மலர்க் குழுவும் அமைக்கப்பட்டு திருப்பணி வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

வருத்தமும் மகிழ்ச்சியும் !

இறைத் தொண்டாலும் இன்னமுதத் தமிழ்த் தொண்டாலும் அறக் கொடையாலும் ஏற்றம் பெற்ற நம் நகரத்தார்கள் வாழும் செட்டிநாடு, இந்திய வரை படத்தில் இடம் பெருதது வருத்தம் தரக்கூடியதுதான். ஆயினும் உலகத்தார் இதயங்களிலெல்லாம் நம்மவர்கள் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்ருகும்.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(செட்டிநாடு அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுரர் திருக்கோவிலில் 13-4-92 அன்று நடைபெற்ற பட்டிமன்றத்தில்).

"கண்ணதாசன் வாக்குப் பலிதம் உள்ளவர்"

கண்ணதாசன் முதன் முதலில் சேலம் வந்தபோது அவரை இர யில் நிலையம் சென்று அழைத்து வந்தவன் நான்தான். மண்ணும் அழுக்கும் மூடிய தங்கம்போல் இருந்த அவர், கொஞ்சம் கொஞ்ச மாக புடைக்கப்பட்டது இந்தச்சேலத்தில் தான்.

அவர் எழுதுவதை நகல் எடுப்பதுதான் என் வேலை. அப்போது அவருக்கு மாதச் சம்பளம் 90 ரூபாய் தான். முதல் தேதி சம்பளம் வாங்கினுல் அன்று மாலையே முழுவதையும் செலவழித்துவிட்டு மறுநாளே மற்றவர்களிடம் கடன் வாங்கத் தொடங்கிவிடுவார். அவர் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்.

அவர் ஒரு சிறந்த பாடலாசிரியர் மட்டுமல்ல; சிறந்த நடிகரும் கூட. ஆனுல் அவர் சினிமாவே பார்க்க மாட்டார்.

அவரது நாக்கில் சனி இருந்தது. அவர் என்ன சொன்னுரோ அது அப்படியே பலித்து வந்தது. அவருக்கு அந்த அதீதமான சக்தியை ஆண்டவன் கொடுத்திருந்தான்.

கண்ணதாசனுக்கு எந்த அமைப்பில் உண்மை கிடைக்கவில் லையோ அந்த அமைப்பிலிருந்து உடனே வெளியேறி விடுவார்.

— முக்தா சீனிவாசன்

(படத் தயாரிப்பாளர்)

(சேலம் தெய்வீகம் திருமண மண்டபத்தில் சேலம் மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் சார்பில் 19-4-92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் பேசியது.)

திருச்சி சங்கத்தில் தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சி

திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக தமிழ்ப் புத்தாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சி 13-4-92 திங்கள் மாலை திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி சமூதாய மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திருமதி சம்பா கல்கூரா இறைவணக்கம் பாட, திருச்சி நகரத்தார் சங்கத் தலைவர் திரு. எஸ். ஒ. ஆர்எம். கணபதி செட்டியார் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். சங்கத்தின் முன்னாள் தலைவர் அரிமா திரு. லெ. நா. லெட்சுமணன் அவர்கள் சிறப்பு விருந்தினர், 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களை அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சிறப்பு விருந்தினருக்கு முன்னாள் அரிமா ஆளுநர் திரு. எம். ஏ. எம். எஸ்பி. காசிச் செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவிக்க சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள் மலர் மாலை அணிவிக்க முன்னாள் தலைவர் திரு. ஏ. ஆர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் நகரத்தார்



திருச்சியில் 13-4 92 அன்று நடைபெற்ற தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் திரு. வி. என். சிடி. க்கு திரு. ஏஆர். அண்ணாமலை செட்டியார் நினைவுப் பரிசு வழங்கும் காட்சி. அருகே திரு. எஸ். ஒ. ஆர்எம். கணபதி செட்டியார் திரு. லெ. நா. லெட்சுமணன்.

சமூக வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் நல்ல பல கருத்துக்களை வழங்கினர்கள்.

சென்ற 6-4-92 அன்று 59 ஆம் ஆண்டு நிறைவு விழாக் கண்ட சங்கத்தின் செயலாளர் திரு. சா. சண்முகம் அவர்களுக்கும், அவரது துணைவியார் திருமதி சாரதா ஆச்சி அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கத்தின் சார்பில் சிறப்பு விருந்தினர் திரு வி. என் சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொன்னுடையும், மாலையும் அணிவித்துப் பாராட்டினர்கள்.

சிறப்பு நிகழ்ச்சியாக பள்ளத்தூர் சீதாலெட்சுமி ஆச்சி கல்லூரி தமிழ்ப் பேராசிரியை, டாக்டர்

சரசுவதி ராமநாதன் அவர்கள் தலைமையில் ''கவியரசர் கண்ணதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது, இன்பச் சுவையா? தத்துவமா?'' என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது.

'இன்பச் சுவையே' என்ற அணியில் டாக்டர் திரு. சுப. கதிரேசன் டாக்டர் திரு. பழ. முத்தப்பன் திருமதி சி.எஸ். விசாலாட்சி, ஆகியோரும் 'தத்துவமே' என்ற அணியில் டாக்டர் திரு. கே. சின்னப்பா புலவர் திரு. இரா. சந்திரசேகரன், திருமதி உமையாள் முத்து ஆகியோரும் பேசினார்கள்.

நடுவர் தனது தீர்ப்பில் ''கவியரசர் கண்ணதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது, தத்துவச்சுவையே'' எனக் குறிப்பிட்டார்கள்.

நிகழ்ச்சியை வழங்கிய திருச்சி நாகப்பா கார்ப்பரேஷன் உரிமையாளரும், சங்கத்தின் முன்னாள் தலைவருமான அரிமா திரு. லெ. நா. லெட்சுமணன் அவர்களுக்கு, சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. எஸ்டி. ஏஆர். அருணாசலம் செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்கள்.

செயலாளர், திரு. என். அருண் நன்றியுரை நவில, விழா இரவு 9-45 மணிக்கு இனிது நிறைவு பெற்றது. வந்திருந்தோர் அனைவருக்கும் திரு. லெ. நா. லெட்சுமணன் அவர்கள் விருந்தளித்தார்கள்.

நிகழ்ச்சியை நகரத்தார் சங்கச் செயலாளர் திரு. என். அருண் அவர்களும், திரு எல்.என் லெட்சுமணன் அவர்களின் புதல்வன் திரு. கணேஷ் அவர்களும், இனிய தமிழில் தொகுத்து வழங்கினார்கள்.

காப்புக் கட்டுப் புதுமை

பாகனேரி வெ. வெ. கரு. வே.மாணிக்கம் செட்டியார் அவர்களின் பேத்தியும் திரு. மா.கணேசனின் புதல்வியுமான செல்வி வித்யா என்ற உண்ணாமலைக்கு பாகனேரியில் 20-4-92 அன்று காப்புக் கட்டுப் புதுமை சிறப்பாக நடைபெற்றது. விழாவில் நண்பர்கள், தொழிலதிபர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மதுரை நகரத்தார் சங்கத் தலைவர் திரு. லெ. நா. தலைமையில் பொற்கிழிக் கவிஞர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் 'முருகன் பிள்ளைத் தமிழ்' என்ற தலைப்பிலும் தமிழாகரர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை 'மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்' என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. இராம. சேது நாராயணன் குழந்தையைப் பாராட்டிப் பேசி நன்றி கூறினார்.

புதுமனை புகுவிழா

நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த திரு. கண. க. சொ. கண. சொ. சொக்கலிங்கம் மதுரை கே. கே. நகரில் புதிதாகக் கட்டியுள்ள இல்லத்தின் புதுமனை புகுவிழா 15-4-92 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் அரிமா சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தொழிலதிபர்கள், வணிகர்கள் நண்பர்கள் திரளாகக் கலத்துகொண்டு சிறப்பித்தனர்.

எனது ஆலய அனுபவங்கள்

வி.என். சிதம்பரம்

11

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நிர்வாகத்துடன் மேலும் ஒன்பது கோவில்கள் உள்ளன. அக் கோவில்களாவன:

திருப்பரங்குன்றம்
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

முருகப் பெருமானின் ஆறு படை வீடுகளில் ஒன்றாக இது திகழ்கிறது. அருள்மிகு முருகப் பெருமான், தேவி தெய்வானையை திருமணம் புரிந்து கொண்ட இடம் இது. இத்திருக்கோவில் தற்பொழுது அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நிர்வாகத்திலிருந்து பிரிந்து தனி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

திருவாதவூர்
அருள்மிகு வாதபுரீசுவரர் திருக்கோயில்

இத்திருக்கோவில் மதுரையிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள திருவாதவூரில் அமைந்துள்ளது. ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகாதார்'' என போற்றப்படுகிற திருவாசகத்தை இயற்றிய மாணிக்கவாசகர் பிறந்த ஊர் திருவாதவூர். அருள்மிகு வாதபுரீசுவரர் திருக்கோவில் தோற்றப் பொலிவும் நுட்ப கொடுங்கை வேலைப்பாடுகளும் உடையது. இறைவன் : திருமறைநாதர். இறைவி: ஆரணவல்லி. நடராஜப்

பெருமானுக்கு இங்கு தனிச் சந்நிதி உண்டு.

மதுரை, செல்லூார்
அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோவில்

இத்திருக்கோவில் மதுரை வைகை வடகரையில் செல்லூார் பகுதியில் உள்ளது. திருவாப்பனூார் என்பதே தேவாரப் பெயர். பாண்டி பதினான்கு தலங்களில் ஒன்று. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலம். சோழாந்தகன் என்ற பாண்டியன் அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயத்திற்கு வந்து கொண்டிருந்தான். அப்போது வைகையில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதால் கோவிலுக்குச் செல்ல இயலாமல் போய்விட்டது. மன்னர் அந்த இடத்திலேயே ஆப்பு ஒன்றை நிறுத்தி வழிபட, அது சிவலிங்கமாக உருவெடுத்தது என்று புராணம் கூறுகிறது. இறைவன் திருப்பெயர் திரு ஆப்புடையார் என்பதாகும். இறைவியின் திருப்பெயர் குறவம், கமழ், குழழம்மை என்பதாகும். இந்த இறைவிக்கு அணிந்தெடுக்கப்பட்ட பூமாலை மணம் கமழ்ந்த மாலையாக இருக்கும்.

மதுரை
அருள்மிகு செல்லத்தம்மன் திருக்கோயில்

இத்திருக்கோயில் சிம்மக்கல்லுக்குச் சற்று தெற்கே உள்ளது. இங்குள்ள அம்மன், ஒற்றை சிலம்பைக் கையில் ஏந்தி இருப்பதால் இது கண்ணகி கோவில் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

மதுரை
அருள்மிகு பழைய சொக்கநாதர் திருக்கோவில்

இத்திருக்கோவில் மதுரை வடக்கு வெளி வீதியில் அமைந்துள்ளது. இடைக்காடர்களுடைய பிணக்கைத் தீர்க்கும் பொருட்டு இறைவன் எழுந்தருளிய திருத்தலம் இதுவே. இக்கோவில் தற்போது ஆதி சொக்கநாதர் கோவில் என அழைக்கப் பெறுகிறது.


மற்றும் நாகமலை புதுக்கோட்டை அருள்மிகு பிள்ளையார் கோவில், மதுரை தெற்கு மாசி வீதி அருள்மிகு தென்திருவால சுவாமி திருக்கோவில், வண்டியூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், கொந்தகை அருள்மிகு பெருமாள் கோவில் ஆகிய நான்கும் உப கோவில்களாகத் திகழ்ந்து வருகின்றன.

ஆலயத்தின் நிர்வாக அமைப்புகள்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலிலும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள இருபது திருக்கோவில்களிலும் சுமார் 400 பேர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களில் சிவாச்சாரியார்கள், எழுத்தர்கள், சேவகர்கள் என மூன்று பிரிவினர் உள்ளனர்.

உரிமை காத்திட சங்கங்கள்

இத்திருக்கோவில்களில் பணியாற்றும் மூன்று பிரிவுகளைக் கொண்ட 400 பணியாளர்கள் முறையே சிவாச்சாரியார்கள் சங்கம், எழுத்தர்கள் சங்கம்,



காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திரு கே. நாகப்பன் தம் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழாவில் (9-3-92) துணைவியார் திருமதி மீனாட்சி ஆச்சிக்குத் திருப்பூட்டும் இனிய காட்சி.

சேவகர்கள் சங்கம் என மூன்று சங்கங்கள் வைத்து செயல்பட்டு வருகிறார்கள்.

ஆலயம் ஆற்றிடும்
அறப் பணிகள்
கல்விக் கூடங்கள் :

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நிர்வாகத்தின் கீழ் வண்டியூர் தெப்பக்குளம் அருகில் சொந்தக் கட்டிடத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்பெண்கள் மேல்நிலைப் பள்ளி சிறப்புற நடந்து வருகிறது இப்பள்ளியில் சுமார் 2500 மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள்.

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் நிர்வாகத்தின் கீழ் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி மகளிர் உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் சுமார் 1000 மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள்.

அனாதைப் பிள்ளைகளுக்கு உதவி

மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா டி.கல்லுப்பட்டியில் இயங்கி வரும் ஒரு கிறிஸ்த்துவ கல்விக் கூடத்தில் பயிலும் 100 அனாதைப் பிள்ளைகளுக்கு இலவச கல்வி, உணவு மற்றும் வசதிகளை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நிர்வாகம் ஏற்று இலவசமாக

வழங்கி வருகிறது.

சமயப் பிரச்சாரம்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நிர்வாகம் தனது சொந்தச் செலவில் ஆண்டு முழுவதும் தொடர்ந்து சமயப் பிரச்சாரங்களை தகுதி வாய்ந்த சமயப் பெரியோர்கள் உதவியுடன் நடத்தி வருகிறது.

அரிசனப் பெருமக்களின் ஆலயப் பிரவேசமும் அண்ணல் காந்தியடிகளின் மன நிறைவும்:

தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் பலமுறை மதுரைக்கு வந்தும் இக் திருக்கோவிலுக்குள் தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே அனுமதிக்கப்படாததால் அவரும் கோவிலுக்குள் செல்லவில்லை. 1937 ஆம் ஆண்டு அரிசனப் பெருமக்கள் ஆலயத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டு, அன்னை மீனாட்சியை தரிசனம் செய்து வைக்கப்பட்டனர். அதன் பிறகு மதுரைக்கு வருகை தந்த காந்தியடிகள் ஆலயத்திற்குள் வருகை தந்து, அன்னை மீனாட்சியை தரிசித்தார். அவர் கோவிலுக்கு வருகை தந்ததை நினைவூட்டும் வகையில் அம்மன் சந்நிதி வீதிக்குப் பக்கத்தில் அவரது திருவுருவச் சிலையை நிறுவியிருக்கிறார்கள் அதோடு மட்டுமின்றி கிழக்குக் கோபுரத்தில் அவரது திருவுருவப் பொம்மையை வைத்துள்ளார்கள்.

(வளரும்)

சபரிமலை நகர விடுதிக்கு எம். ஏ. எம். இராமசாமி நன்கொடை

மணி விழாக் கண்ட டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் 18-11-91 அன்று சபரிமலை ஐயப்ப சேவா சங்கத்திற்கு வருகை தந்தபொழுது அச்சங்கத்தின் அகில பாரத துணைத் தலைவர் திரு. முத்து கரு. மு. முத்தையா செட்டியார் (தேவகோட்டை) வரவேற்றுப் பொன்னாடை போர்த்தினார்கள். அப்பொழுது சபரிமலை நகர விடுதி கட்டிட நன்கொடையாக திரு.எம்.ஏ.எம்.இராமசாமி அவர்கள் ரூ. 50,000 வழங்கினார்கள். திரு. எம். எஸ். ஆர்எம். மெய்யப்பன் நன்றி கூறினார். சபரிமலை நகர விடுதிக்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் திரு. லெ. சுப்பையா, 8, குலாலர் தெரு, கம்பம், மதுரை மாவட்டம் என்ற முகவரிக்கு நன்கொடை அனுப்பக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

திருச்செந்தூர்ப் பாத யாத்திரை

தேவகோட்டையிலிருந்து திருச்செந்தூருக்குப் பதினாறாம் ஆண்டுப் பாதயாத்திரை 10-4-92 அன்று தொடங்கியது. காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் அதனைத் தொடங்கிவைத்தார். நான்கு காவடிகள், ஆயிரம் பக்தர்கள் காசிஸ்ரீ திரு. ஆர். வயிரவன் தலைமையில் நடந்து 17-4-92 காலை திருச்செந்தூர் சென்று மாலையில் காவடி, பாற்குடங்கள் செலுத்தி வழிபட்டனர்.

எல்லோரும் வாங்கும் விலையில் புத்தகங்கள்

'வீட்டைக் கட்டிப் பார்; கல்யாணத்தைச் செய்து பார்' என்பது பழமொழி.

'பத்திரிகை நடத்திப் பார்; புத்தகம் போட்டுப் பார்' என்பது இன்றைய மொழி.

பத்திரிகை நடத்துபவர்களுக்கும், புத்தக வெளியீட்டாளர்களுக்கும் மட்டுமே புரியும் இந்தப் பிரசவ வேதனை. கடந்த 20 ஆண்டுகளாக பல்வேறு சூழ்நிலைகளுக்கிடையே, தணியாத தமிழ் ஆர்வத்துடன் உயர்ந்த தமிழ் நூல்களை மட்டுமே பதிப்பித்து வெற்றியுடன் செயல்பட்டு வரும் மணிவாசகர் பதிப்பகத்தின் உரிமையாளரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைப் பேராசிரியருமான 'பதிப்புச் செம்மல்' முனைவர் திரு. ச. மெய்யப்பன் அவர்களை ஒரு இனிய மாலைப் பொழுதில் பேட்டிக் கண்டபோது.

ஃ உங்கள் முதல் வெளியீடு எது?

ஃ ''அன்பு நெறியின் வாழ்க்கை'' என்ற நூல்தான் எங்கள் முதல் வெளியீடு அதை எழுதியவர் திரு. சுந்தரேச வாண்டையார்.

ஃ உங்கள் பதிப்பகத்தின் சாதனைகள் பற்றி

ஃ நாங்கள் இதுவரை வெளியிட்ட நானூறு புத்தகங்களில் இருபத்தைந்து நூல்கள் பரிசு பெற்றுள்ளன. நாற்பது நூல்கள் கல்லூரிகளில் பாடப் புத்தகங்களாக வெளி மாநிலங்களில் கூட வைக்கப்பட்டுள்ளது. இது எங்கள் மணிவாசகர் பதிப்பகத்திற்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறோம்.

டாக்டர் வ. சுப. மாணிக்கத்தின் அனைத்து எழுத்துக்களையும் பொருள் வாரியாகப் பிரித்து எங்கள் சொந்த முயற்சியில், வேறு யாரிடமும் பொருள் உதவி பெறாமல் பிரசுரித்திருக்கிறோம்.

அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவரது எழுத்துக்களைத் தேடிக் கண்டுபிடித்து தொகுத்து பதிப்பித்துள்ளோம். இது மணி



வாசகர் பதிப்பகத்தின் குறிப்பிடத்தக்க சாதனை. 'இது எவருக்கும் கிட்டாத பேறு' என்று வ. சுப. மா. அவர்கள் கூறியுள்ளார்கள்.

நாங்கள் பொழுதுபோக்கு நூல்களுக்கு முதலிடம் தராமல் இலக்கிய நூல்களுக்கே முதலிடம் தருகின்றோம். ஒவ்வொரு நூலுக்கும் நாங்கள் எழுதும் பதிப்புரையே அந்தத் துறையைப் பற்றிய சிறந்த ஆய்வாக இருக்கும். இதுவரை நாங்கள் வெளியிட்டுள்ள நூல்களின் பதிப்புரைகளைத் தொகுத்து 'பதிப்புரை இலக்

கியம்' என்ற நூலையும் கொண்டு வந்துள்ளோம்.

மக்கள் இலக்கியத் தரம் வாய்ந்த நூல்களைத் தேடுகிறார்கள். அவர்களுடைய அறிவுத் தாகத்தை தணிக்க வேண்டியது தரமான பதிப்பகங்கள் மற்றும் அரசின் கடமையாகும். சிறந்த நூல்கள் கிடைக்காத போதுதான் மக்கள் 'சீப்'பான நாவலுக்குப் போகிறார்கள்.

ஃ தங்களது எதிர்காலத் திட்டம் பற்றி...

ஃ தரமான தமிழ் நூல்களை எல்லோரும் வாங்கும் விலையில் கொடுக்க வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்.

நன்றி : மங்களம்

கண்ணதாசன் விழாவில் காதில் விழுந்தவை!

கண்ணதாசன் விழாவில் கலந்துகொள்வது எங்கள் வாடிக்கை. 'திராவிடப் பொன்னுடே' என்ற பாடலில் நாட்டின் செல்வத்தைக் கண்ணதாசன் அருமையாக வர்ணித்திருக்கிருர். 'செந்தமிழ்த் தேன் மொழியாள்' - தமிழுக்கு ஒரு பாட்டு .ஒரு நேரத்தில் கண்ணதாசன் பாட்டுக்கள் இல்லாத படங்களே இல்லை என்ற நிலை இருந்தது. இப்போது பாடல்கள், பாடல்களாக இல்லை.

— சித. சிதம்பரம்



கண்ணதாசனின் கருத்துக்கள் முரண்படும்; ஆனால் கவிதைகளில் நயம் பின்தங்கியது இல்லை. ஒன்றைப் பாராட்டும்போது அவரைப் போல் பாராட்டவும் முடியாது; திட்டும்போது அவரைப் போல் திட்டவும் முடியாது. காதலன் - காதலி பேசுவதான உயிரோட்டமான கவிதையை கண்ணதாசன் போல் வேறு யாரும் எழுத முடியாது.

— த. இராமலிங்கம்

கண்ணதாசன் எளிமையாகப் பேசுவார். அதுபோல் எளிய முறையில் பாடல்களை இயற்றுவார். நான் பேச நினைப்பதெல்லாம்... படித்ததினுல் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு... புல்லாங் குழல் கொடுத்த மூங்கில்களே... போன்ற அவரது பல பாடல்கள் என்னைக்

கவர்ந்தவை. லவ்வுன்னு லவ்வு மண்ணெண்ணெய் ஸ்டவ்வு வானத்தைக் கவ்வுன்னு... இப்போது பாட்டெழுதுகிருர்கள்.

— ஏஎல். திருநாவுக்கரசு

கண்ணதாசனின் கவிதைகள் பல, சட்டங்களாகி இருக்கின்றன. எந்தக் கவிஞன் சமுதாயத்தைப் பற்றி எண்ணவில்லையோ அவன் மின்னமாட்டான் 'அச்சமென்பது மடமையடா' என்ற பாட்டு எம். ஜி. ஆரைக் கவர்ந்த பாட்டு; அவர் பாராட்டிய பாட்டு!

— புலவர் மு. கதிரவன்

கவியரசர் மாதிரி வாழ்க்கையில் துன்பப்பட்டவர்கள் யாரும் இல்லே. 'நான் அழுவதற்காகவே பிறந்தேன்' என்கிருர் ஒரு பாடலில். அனுபவம் அவரது கவிதைகளில் பளிச்சென்று தெரிகிறது

— சு. சரஸ்வதி

மனேவியை தெய்வம், தேவாரம், திருவாசகம் எனக் குறிப்பிடுகிருர் கண்ணதாசன்.

— எல். கே சுபாஷ் சந்திரபோஸ்

வானம் அழுகிறது மழையாக, வையகம் அழுகிறது பனியாக, காலம் அழுகிறது கலேயாக. கவிஞன் அழுகிறேன் கவிதையாக என்கிருர் கண்ணதாசன்.

— சாது. சாரங்கபாணி

கம்பனுக்குப் பின் பாரதி, பாரதிக்குப்பின் பாரதிதாசன், பாரதிதாசனுக்குப்பின், கண்ணதாசன். அதற்குப் பிறகு ஆளே இல்லே.

— மு. ராஜரத்தினம்

உண்மையை எடுத்துச் சொன்னதால் கண்ணதாசன் வாழ்ந்து கொண்டிருக்கிருர். மனித சமுதாயத்தைக் கண்ணதாசன்போல் யாரும் ஊடுருவிப் பார்த்திருக்க மூடியாது.

— புலவர் மா. இராமலிங்கம்

சமுதாயத்தைப் பற்றிய சிந்தனேயாளனுக கவிஞன் இருக்க வேண்டும். குறைகளே மட்டுமே சொல்லாது அதை நீக்குவதற்கு வழி வகைகள் சொல்ல வேண்டும்.


— அரு. நாகப்பன்

''சூரிய காந்தி'' படத்திற்காக 'பரமசிவன் கழுத்திலிருந்து...' என்ற பாடலே கண்ணதாசன் எழுதினர். அந்தப் பாடல் காட்சியில் அவரே நடித்தால் நன்ருக இருக்குமென்று சொன்னவர் இன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதா.

— முக்தா சீனிவாசன்

(காரைக்குடியில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் கேட்டவை)

தொகுப்பு : "எல்லெஸ்"



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ நாட்டரசன்கோட்டையில் உள்ள கானாடுகாத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் மேனிலைப் பள்ளியின் வெள்ளி விழா 14-3-92 அன்று சிறப்பாக நடைபெற்றது. அதனை ஒட்டி மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது

ஃ கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழாவையொட்டித் தயாரிக்கப் பெற்ற மலரின் வெளியீட்டு விழா 28–3-92 அன்று சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

ஃ குருவிக்கொண்டான்பட்டி கவிமணி மன்றத்தின் 34 ஆம் ஆண்டு கவிமணி விழா 13 & 14–4–92 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன.

ஃ காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகமும் காரைக்குடி சுழற் குழுவும் இணைந்து காரைக்குடியில் 6-4-92 அன்று வள்ளல் டாக்டர் ஆர்எம். அழகப்ப செட்டியார் அவர்கள் நினைவாக நிறுவனர் நாளைக் கொண்டாடின.

ஃ ஆ. முத்துப்பட்டணம் ஸ்ரீ லோக நாயகி அம்மன் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 8-5-92 வெள்ளி காலை 7-30 மணிக்கு மேல் 8–12 மணிக்குள் நடைபெற உள்ளது

ஃ செவ்வூர் சோணையன் கோவில் படைப்பு வீட்டில் சித்திரை மீ 28உ & 29உ (10 & 11-5-92) ஞாயிறு, திங்களன்று படைப்பு நடைபெற உள்ளது.

ஃ காரைக்குடி நகரச் சிவன் கோவிலில் 1–5–92 அன்று நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் உழவாரப் பணி சிறப்பாக நடைபெற்றது.

ஃ சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு எட்டுக்குடி நகர மடத்தில்

17-4-92 அன்று மகேஸ்வர பூஜை நடைபெற்றது.

ஃ வானதி திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கள் தொடக்க காலத்தில் ஜில் ஜில், கோமாளி, மிட்டாய், வெண்ணிலா போன்ற பத்திரிகைகளை நடத்தியவர்கள்.

கோவையில் கண்ணதாசன விழா !

கோயமுத்தூரில் 24-5-92 & 25-5-92 ஆகிய இரு தினங்கள் கவியரசு கண்ணதாசன் விழா நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஏ ஆர். லெட்சுமணன், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் நடிகர் திரு. ஜெய்சங்கர், படத் தயாரிப்பாளர் திரு. முக்தா சீனிவாசன் ஆகியோர் பங்கு கொள்கிறார்கள்.

திரைப்படப் பாடலாசிரியர் திரு. மு. மேத்தா தலைமையில் கவியரங்கமும் திரு. பாஸ்கரபால் பாண்டியன் தலைமையில் சிந்தனை மேடையும் திரு. அரு. நாகப்பன் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெற உள்ளன.

விழாவிற்கான ஏற்பாடுகளை கோவை மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் திரு. என். சின்னத்தம்பியும் மற்றும் ஆட்சிக் குழுவினரும் செய்து வருகிறார்கள்.



பதினைந்து நாட்களுக்குள் பாரதமே போற்றுமளவிற்கு சேலத்தில் கண்ணதாசனுக்கு விழா எடுத்த திரு வி. பழனியப்பனுக்கு மாநிலத் தலைவர் திரு. வி. என். சிடி. நினைவுப் பரிசு வழங்குகிறார். அருகே திரு. அரு. நாகப்பன்.

வட இந்திய காசி யாத்திரை

பத்ரிநாத் - கேதார்நாத் - காசி 18-6-92 முதல் 19 நாட்கள்

டெல்லி – ஆக்ரா - மதுரா – சிக்கந்தரா - பிருந்தாவன் – ஹரித்துவார் - ரிஷிகேஷ் - தேவபிரயாக் - ருத்ரபிரயாக் - கௌரி குண்டு - கேதார்நாத் - கோபேஷ்வர் - ஷோசிமாத் – பத்ரிநாத் - காசி - கயா – புத்தகயா - அலகாபாத் - (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 2750/-. இதில் பம்பாய், கல்கத்தா சேர்த்து 24 நாட்கள் நபர் 1க்கு ரூ. 3570/- இதே யாத்திரை 18-7-92லும் புறப்படுகிறது.

நேப்பாள் - காசி யாத்திரை 27–6-92 முதல் 18 நாட்கள்

டெல்லி - ஆக்ரா – மதுரா – பிருந்தாவன் – ஹரித்துவார் – ரிஷிகேஷ்–காசி–அலகாபாத் (திரிவேணி) அயோத்தி–நேப்பாள் – கயா – புத்தகயா.

III டயர் ரயில் கட்டணம், சாப்பாடு, நேப்பாள் பஸ் கட்டணம் உள்பட நபர் 1க்கு ரூ. 2700/–. இத்துடன் கல்கத்தா-பம்பாய்-பண்டரிபுரம் சேர்த்து 24 நாட்கள் நபர் 1க்கு ரூ. 3570/-

---

பம்பாய் - டெல்லி - காசி - கல்கத்தா

27-7-92 முதல் 15 நாட்கள்

டெல்லி - ஆக்ரா – மதுரா – பிருந்தாவன் – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – காசி – அலகாபாத் (திரிவேணி) – கயா – புத்தகயா.

III டயர் ரயில் கட்டணம், சாப்பாடு, ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 2100 –. இத்துடன் கல்கத்தா – பம்பாய் - பண்டரிபுரம் சேர்த்து. 20 நாட்கள் நபர் 1க்கு ரூ. 3000/- L.F.C. வசதி உண்டு. சுற்றுலாவில் கலந்துகொள்ள விரும்புவர்கள் நபர் 1க்கு ரூ. 1000/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி டிக்கட் பதிவு செய்து கொள்ளவும்.

ஸ்ரீ மூகாம்பிகை, திருப்பதி வெங்கிடாஜலபதி தெரிசனம்

11-5-92 முதல் 16-5-92 வரை 6நாட்கள் ஸ்பெஷல் பஸ் பிரயாணம்

மதுரை - பன்னாரி – மைசூர் - சுப்ரமண்யா - தர்மஸ்தலா – கட்டீல் - உடுப்பி - கொல்லூர் ஸ்ரீ மூகாம்பிகை - சிருங்கேரி - திருப்பதி - திருத்தணி - காஞ்சிபுரம் - மேல் மருவத்தூர் - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், சாப்பாடு, தங்கும் சிலவு கர்நாடக வரி உள்பட நபர் 1க்கு ரூ. 630/- அட்வான்ஸ் ரூ. 100/- அனுப்பி டிக்கட் பதிவு செய்யவும்.

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9. வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1. 31166



காரைக்குடியில் செட்டிநாடு பைனுன்ஸ் (இந்தியா) பி. லிமிடெட் என்ற நிதி நிறுவனத்தை 20–4-92 அன்று மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி திறந்து வைக்கும் காட்சி.

நிதி நிறுவனத் தொடக்க விழா

காரைக்குடியில் செட்டிநாடு பைனுன்ஸ் (இந்தியா) பி. லிமிடெட் என்ற நிதி நிறுவனத்தை 20–4–92 அன்று காலை மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்கள் திறந்து வைத்தார்கள். இவ்விழா திரு. எஸ். வி. என். நாகப்பன் முன்னிலையில் திரு. ஏ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. திருமதி மீனுட்சி அருணுசலம் திருவிளக்கு ஏற்றி வைத்தார்கள். திரு. பி எல். ஆறுமுகம், திரு. முத்துபழநியப்பன், திரு. ஆர். சொக்கலிங்கம், திரு. பி. எஸ். ஆர் எம். ஏ. இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினுர்கள். நிகழ்ச்சியின் துவக்கத்தில் திரு. என் பி. இராமசாமி வரவேற்க நிதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. எல். சிதம்பரம் நன்றி கூறினுர்.

விழாவிற்கு வருகை தந்தவர்களை நிதி நிறுவனத்தின் பங்குதாரர்கள் வரவேற்றனர்.

விழுப்புரம் சங்கம் : புதிய நிர்வாகிகள் தேர்வு

விழுப்புரம் நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 5-4 92 ஞாயிறு மாலை நடைபெற்றது. அப்போது 1992–93 ஆம் ஆண்டிற்கு திரு. ஆர்எம். முத்தப்பன் கௌரவத் தலைவராகவும் திரு. என். லெட்சுமணன் தலைவராகவும் திரு. கேஆர். இராமநாதன் துணைத் தலைவராகவும் திரு. ஏஆர். மெய்யப்பன் செயலாளராகவும் திரு. கேஆர். சின்னையா இணைச் செயலாளராகவும் திரு எல். ஆர்எம். முத்துக் கருப்பன் பொருளாளராகவும் மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.


வழிகாட்டி சுப. அ. நடராசன் செட்டியார்



செல்வத்துப் பயன்ஈதல் என்று கண்டு
சிறப்பாகப் பெருவாழ்வு வாழ்ந்த செம்மல்
கல்வியொடு வேலைகளும் வாங்கித் தந்து
கைகாட்டி வழிகாட்டும் கருணை வள்ளல்
இல்லையென வானுலகில் யார்கேட் டார்கள்!
யாருக்குப் பரிந்துரைக்கச் சென்றாய் ஐயா!
நல்லமனப் பெருஞ்செல்வ! பணையப் பட்டி
நடராச! எம்நெஞ்சில் நாளும் வாழ்வாய்.

— சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.

மாதரசி வள்ளியம்மை ஆச்சி



தான்பெற்ற மைந்தனை மீனாட்சி மைந்தனைத்
தந்துபுகழ் பெற்ற தேவி
தக்கசீர்க் கணவரும் மக்களும் சூழவே
தருமநெறி நின்ற தேவி
வான்பெற்ற கணவனார் தனைத்தேடிச் சென்றிட்ட
மாதரசி வள்ளி யம்மை.
மன்றிலே ஆடுவான் திருவடியில் நிற்குமுனை
வாழ்த்தினோம். வாழ வைப்பாய்.

— சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.

சுப. அ. நடராசன் செட்டியார்


கள்ளக்குறிச்சி ஆற்காடு டெக்ஸ்டைல் மில்ஸ் லிட். டின் நிர்வாகக் குழுத் தலைவரும் மதுரை நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ''நகரத்தார் குர'' லின் வெளியீட்டாளருமான பனையப்பட்டி உயர்திரு சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள் தமது 78 ஆவது வயதில் 3-4-92 அன்று இயற்கை எய்தினார்கள்.

வாழ்க்கைக் குறிப்பு

இவர்கள் 18-4-1914ல் பிறந்தவர்கள். இரணிக்கோவிலைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பனையப்பட்டி திண்ணைப் பள்ளியிலும் இலங்கை இரத்தினபுரியில் 8ஆம் வகுப்பு வரையிலும் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் மெட்ரிகுலேஷன் வரையிலும் படித்தார்கள். பின்பு கொழும்பில் இலண்டன் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்த யுனிவர்சிட்டி கல்லூரியில் M. B. B. S. ஓராண்டு படித்தார்கள். பின் சென்னையில் ஒய். எம். சி. ஏ. யில் D. Com. படித்துத் தேர்ச்சி பெற்றார்கள்.

கொழும்பில் இவர்கள் தம் தந்தையார் அண்ணாமலைச் செட்டியார் அவர்களோடு சேர்ந்து தோட்டங்களுக்கு வேண்டிய பணிகளை பல ஆண்டுகள் செய்து வந்தார்கள்.

1930ல் பண்டித ஜவஹர்லால் நேரு கொழும்புக்கு வருகை தந்தபோது இளைஞர்கள் ஒன்று சேர்ந்து 'நேரு சங்கம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள். அதில் இவர்கள் செயலாளராக



மதுரை இரயில் நிலையத்தில் செட்டி நாட்டரசர் ராஜா சர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்களுக்கு பனையப்பட்டி சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள் மகிழ்ச்சியோடு மாலை அணிவித்த மறக்க முடியாத காட்சி.

இருந்து சேவை செய்தார்கள்.

1956ல் இலங்கையில் இந்தியர்களுக்கு எதிர்ப்பு இருந்த நேரம். அச்சமயம் இவர்கள் இந்தியா திரும்பி காலஞ்சென்ற ஆலை அதிபர் உயர்திரு சி. எஸ். ராமாச்சாரி அவர்களின் உதவியால் மதுரையில் ராஜேஸ்வரி ஆலையை ஒப்புக்கொண்டு நடத்தி வந்தார்கள். அதன்பின் கள்ளக் குறிச்சியில் 18. 9. 1964ல் ஆற்காடு நூற்பாலையைத் தொடங்கி அதன் இயக்குநராகப் பல ஆண்டுகள் இருந்து பின் நிர்வாக இயக்குநராகி அதனைத் திறம்பட நிர்வகித்து வந்தார்கள்.

நகரத்தார் சங்கம்

இவர்கள் மதுரை நகரத்தார் சங்கத்தில் செயற்குழு உறுப்பினராக, பொருளாளராக, உதவித் தலைவராக, தலைவராக இருந்து பல ஆண்டுகள் அரும் பணியாற்றியிருக்கிறார்கள்.

''நகரத்தார் குரல்''

''நகரத்தார் குர'' லின் வெளியீட்டாளரான இவர்கள் அதன் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியிருக்கிறார்கள்.

குடநீராட்டு விழாக்கள்

நடராசன் செட்டியார் அவர்கள் இரணிக் கோவில் திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்து பெரும் தொகை நன்கொடையளித்து குட நீராட்டுச் சிறப்புற நடைபெற உதவினார்கள். அதுபோல் பனையப்பட்டி நகரச் சிவன் கோவில் குட நீராட்டு விழாவுக்கும் உதவினார்கள்.

நடராசன் செட்டியார் அவர்கள் தூய உள்ளம் கொண்டவர்கள். நல்ல காரியங்களுக்கு மனமுவந்து உதவும் பண்பாளர். சமூக முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தவர்கள். அவர்களது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

கோவிலூரில் சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தின் சார்பில் 11–4–92 அன்று காலை சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கோவிலூர் தவத்திரு காசி விஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் தலைமை தாங்க காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி இராமநாதன் செட்டியார் ''மணிவாசகரும் திருவாசகமும்'' என்பது பற்றி உரையாற்றினார்கள்.

வருடாபிஷேக விழா

காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலின் வருஷாபிஷேகம் 11–4–92 அன்று சிறப்பாக நடைபெற்றது. கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திருகாசிவிஸ்வநாதஞான தேசிக சுவாமிகள் விழாவினைத் தொடங்கிவைத்தார்கள். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் சிறப்புரை ஆற்றினார். கோயில் டிரஸ்டிகள் திரு. இராமசாமிச் செட்டியார், திரு. அண்ணாமலை செட்டியார் வரவேற்றனர். திரு. சண்முகம் செட்டியார் உபயமாக அம்மன் திருவீதி உலா நடைபெற்றது.

கருணையுள்ள பார்வதி ஆச்சிக்குக் கண்ணீர் அஞ்சலி

பாசமுள்ள பார்வதி ஆச்சி.
பவுசு இல்லா பார்வதி ஆச்சி
'தம்பீ' என்று கூப்பிடுகையிலே தரம் தெரியும்
'அப்பச்சி' என்று கூப்பிடுகையிலே அன்பு சொரியும்
பார்வதியின் மகனாய்ப் பிறந்து
மீனாட்சி திருமைந்தனாய் வளர்ந்த பிள்ளை தம்பி சிதம்பரம்.
தாயின் பிரிவாலே-தன்னை அறியாமல்-
கண்ணீர் விடுகையிலே
தரையெல்லாம் தண்ணீரானதே.
சேயின் நற்செயலாலே -
தரணி புகழ் பாடுகையிலே
தங்க மனசு ஆத்தாவுக்கு
உள்ளம் எல்லாம் மலரானதே.
என்தாயும் உன்தாயும் ஒன்றானார்கள்
இளமையிலே பாலூட்டி வளர்த்த தாயும்
முதுமையிலே சோறூட்டி வளர்த்த தாயும்
இன்று ஒன்றானார்கள்.
இருதாயும் இருசேய்க்கு' நல்லாசி தந்துதவவேண்டும்.
தரணி எல்லாம் எங்கள் புகழ் பரவவேண்டும்
அறம் வளர்க்கும் ஸ்ரீ அபிராமித்தாய் எங்களுக்கு
நல் நீடூழி வாழ்வு தரவேண்டும்.

இப்படிக்கு.

நாலு பேரு மத்தியிலே, நல்லதிலும் - கெட்டதிலும்
நடுவில் நின்று நாட்டரசு செய்யும் நல்அம்மான்.

— கவிஞர் ''ராஜயோகம்'' முத்தண்ணன்

91/1

பண்பாளர் நடராசன் செட்டியார்

எல். சுந்தரம்

பனையப்பட்டி உயர்திரு சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள் உள்ளத்தால் உயர்ந்தவர்கள். பிறருக்கு உதவுவதை தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருந்தவர்கள். வயது வித்தியாசம் பாராமல் - தகுதி பாராமல் பழகக் கூடியவர்கள். ஒருவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணிவிட்டால் கண் துஞ்சாது அதனை முடித்துக் கொடுப்பார்கள். இவர்களது பரிந்துரையின் மூலம்-உதவியின் மூலம் படித்தோர், படித்துக்கொண்டிருப்போர், பணிகளில் இருப்போர் ஏராளம்! ஏராளம்!

ஃ ஃ ஃ

பள்ளிகளில், கல்லூரிகளில் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டுமென்ற கட்டாயம் யாருக்காவது ஏற்பட்டால் அவர்கள் உயர்திரு



''நகரத்தார் குரல்'' வெளியீட்டு விழாவில் (25-2-82) திரு. சுப. அ. நடராசன் செட்டியார், திரு. எல் அழகுசுந்தரம் செட்டியார், திரு. பழ. கருப்பையா அமர்ந்திருக்க அப்போதைய அமைச்சர் திரு. கே. காளிமுத்து உரையாற்றும் காட்சி.

சுப. அ. ந. அவர்களை நினைக்காமல் இருக்க முடியாது. அப்படி நினைத்து, அவர்களை அணுகி, உறவினர் வீட்டுப் பிள்ளைகளுக்கு கல்வி நிறுவனங்களில் இடம் பெற்றவர்களில் நானும் ஒருவன்.

ஃ ஃ ஃ

எனது புதல்வன் திரு. தங்கமணியின் திருமணம் 3-2-89 அன்று நடராஜபுரத்தில் நடைபெற்றது. திருமணத்திற்கு வருகை தந்த ந. அவர்கள் என்னைச் சந்தித்து ''சுந்தரம், எனக்கு ஏகப்பட்ட வேலைகள் உள்ளன. வரமுடியாத சூழ்நிலை. வராவிட்டால் நீ கோபித்துக் கொள்வாய் என வந்தேன். திருப்பூட்டியவுடன் நான் புறப்படுகிறேன்'' என்று கூறியபடியே புறப்பட்டுச் சென்றார்கள். ந. அவர்கள் ஒளிவு மறைவில்லாமல் எதையும் பேசக் கூடியவர்கள்.

ஃ ஃ ஃ

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம். நான் மஞ்சள் காமாலை நோயினால் அவதிப்பட்டு பிழைப்பேனோ மாட்டேனோ என்ற இக்கட்டான நிலையில் இருந்த நேரம். பிழைப்பது அரிது என்ற எண்ணத்தில் பெரியவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் சிலருக்குத் தகவல் சொல்லி அனுப்பினேன். திரு. சுப. அ. ந., ஆசிரியர் திரு. வி. என். சிடி, திரு. கலைமகள் நடராசன் செட்டியார் ஆகியோர் என்னை என் இல்லத்தில் வந்து பார்த்து ஆறுதல் கூறினார்கள். அப்போது ந. அவர்கள் ''சுந்தரம் நீ நல்ல பிள்ளை. உனக்கு ஒரு குறையும் வராது. உனக்கு ஆண்டவன் துணை இருப்பான். என்னுடைய கார் சர்வீசுக்குப் போய்விட்டதால் உன்னை இரண்டு தினங்களுக்கு முன்பே வந்து பார்க்க முடியவில்லை. எனவே ஒரு காரை இரவல் வாங்கி வந்திருக்கிறேன்'' என்று கூறி, ஆறுதல் சொல்லிச் சென்றார்கள். குழந்தை உள்ளம் கொண்ட அந்த மாமனிதரின் ஆறுதல் சொற்கள் இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

சுப. அ. ந. மறைவிற்கு இரங்கற் கூட்டம்

ஆற்காடு டெக்ஸ்டைல் மில்ஸ் லிட்டின் நிர்வாகக் குழுத் தலைவரும் மதுரை நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவருமான பனையப்பட்டி உயர்திரு சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள் இறைவனடி சேர்ந்ததற்கு அஞ்சலி செலுத்த மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் மதுரை வடக்கு ஆடி வீதியில் உள்ள திருவள்ளுவர் கழகக் கட்டிடத்தில் 24-4-92 அன்று மாலை இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார் தலைமையேற்றுப் பேசினார். அவரைத் தொடர்ந்து காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் திரு. கே நாகப்பன், முனைவர் திரு. தமிழண்ணல், முனைவர் திரு. சுப. அண்ணாமலை டாக்டர் திரு. எஸ். சண்முகம் செட்டியார் திரு. செ. செல்லப்பன், திரு. சொ.சொ.மீ. சுந்தரம் ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினார்கள்.

வ. நா. வள்ளியம்மை ஆச்சி இயற்கை எய்தினார்கள்

சென்னை கமலா திரையரங்கின் நிறுவனரும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் முன்னாள் தக்காரும் நமது இதழின் ஆசிரியருமான இராங்கியம் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களின் தாயார் திருமதி வ. நா. வள்ளியம்மை ஆச்சி என்கிற பார்வதி ஆச்சி அவர்கள் தமது 78 ஆவது வயதில் 21–4–92 செவ்வாய்க்கிழமை மாலை 5-20 மணிக்கு இராங்கியத்தில் இயற்கை எய்தினார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர்களது இறுதிச் சடங்குகள் இராங்கியத்தில் 22–4–92 புதன்கிழமை மாலையில் நடைபெற்றன. நூற்றுக் கணக்கானோர் தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

திருமதி வள்ளியம்மை ஆச்சி அவர்கள் தெய்வ பக்தி மிக்கவர்கள். இரக்க குணம் படைத்தவர்கள். உறவினர்களுக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் உதவும் மனம் கொண்டவர்கள். அன்பிலும் பண்பிலும் சிறந்தவர்கள்.

திருமதி வ. நா. வள்ளியம்மை ஆச்சி அவர்களுக்கு திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஒரே புத்திரர். மற்றும் திருமதி ருக்மணி சேக்கப்பன், திருமதி கமலம் வடிவேல், திருமதி



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலுக்கு வருகை தந்த காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் அருளாசி பெறும் இராங்கியம் திருமதி வ. நா. வள்ளியம்மை ஆச்சியும் அவர்தம் புதல்வர் திரு. வி. என். சிடி.யும்.

சிவகாமி பழநியப்பன், திருமதி அழகம்மை சொக்கலிங்கம் என நான்கு புதல்விகளும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

திருமதி வ.நா.வள்ளியம்மை ஆச்சி அவர்களின் கணவர் திரு. வ. நாகப்ப செட்டியார் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பே இயற்கை எய்தி விட்டார்கள்.

நெய்வேலியில் மலர் வெளியீட்டு விழா

நெய்வேலி நகரத்தார் பண்பாட்டுக் கழகத்தின் பதினாரும் ஆண்டு மலர் வெளியீட்டு விழா கழகத் தலைவர் திரு. விஎன். அண்ணாமலை செட்டியார் தலைமையில் 15-3-92 அன்று சிறப்பாக நடைபெற்றது. மலர்க் குழுத் தலைவர் திரு. பிஆர். இராமநாதனும், மலர் ஆசிரியர் திரு. கா. முருகப்பனும் அறிமுக உரை நிகழ்த்தினர். அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. கே. நாகப்பன் மலரை வெளியிட, பேராசிரியர் டாக்டர் திரு. ச. மெய்யப்பன் முதல் மலரைப் பெற்றுக் கொண்டார். திருமதி அ. புனிதவதி, இராச மாணிக்கம், திருமதி ராக்கியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். காசி ஸ்ரீ திரு அரு. சோம சுந்தரன் ஒரு மணி நேரம் சிறப்புரை ஆற்றினர். கழகச் செயலர் திரு. என். சொக்கலிங்கம் நன்றி கூறினர்.

"நான் கிராக்கி செய்வது இல்லை"

மேடையில் பேச அழைப்பு வந்தால் நான் கிராக்கி செய்வது இல்லை. மேடையில் பேசுவது என்பது என் தொழில். 35 ஆண்டுப் பழக்கத்தை லேசில் விட்டுவிட முடியாது.

மணி விழாத் தம்பதியர் ஹனிமூனுக்குப் போய்விடக்கூடாது என்று உடனே பாராட்டு விழாவை வைத்துவிட்டார்கள்.

60 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கம்ப்யூட்டர் தோன்றிவிட்டது. அவர்தான் டாக்டர் நாகப்பன் அவர்கள்.

அமெரிக்காவில் பணியாற்றிய அவர்கள் இப்போது நம் நாட்டில் கல்விப் பணியாற்றுவது இந்தியர்கள் பெற்ற பாக்கியம்.

டாக்டர் நாகப்பன் எளிமையில் சிறந்தவரா அடக்கத்தில் சிறந்தவரா என்பதை குன்றக்குடி அடிகளார் அவர்களை நடுவராகக் கொண்டு பட்டி மன்றம் நடத்திப் பார்க்க வேண்டும்.

டாக்டர் அழகப்ப செட்டியார், ராஜாசர் அண்ணாமலைச்செட்டியார் கருமுத்து தியாகராசச் செட்டியார் ஆகியோர் கல்விக் கண் திறந்தவர்கள் அந்த மூவரின் கல்வி நிறுவனங்களில் பணியாற்றிய பெருமைக்குரியவர் நம் நாகப்பன் அவர்கள்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(காரைக்குடி சுழற்குழு சார்பில் மணி விழாக் கண்ட முனைவர் திரு. கே. நாகப்பன் திருமதி மீனாட்சி நாகப்பனுக்கு காரைக்குடி கம்பன் மணி மண்டபத்தில் 9–3–92 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்)

கதம்பம்

ஃ 25 ஆண்டுகளுக்கு முன் 'Collector' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் தண்டலையாளர் எனக் குறிப்பிட்டார்கள். அது இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் எனக் குறிப்பிடப் பெறுகிறது.

ஃ Drum Stick என்பதற்கு சரியான தமிழ்ச் சொல் டமாரக் குச்சி என்பதாகும். டமாரக் குச்சி போல் இருப்பதால்தான் முருங்கக்காயை Drum Stick எனக் குறிப்பிடுகிறார்கள் போலும்!

ஃ நாகர்கோவில் பக்கம் கேரள எல்லையை ஒட்டிய பகுதிகளில் வாழை, பலா, தென்னை மரங்கள் மிக அதிகம். சில இடங்களில் பலாப் பழங்களின் மீது கண் பட்டு விடாதிருக்க துணிகளால் மூடிவைக்கிறார்கள்.

ஃ பப்பாளிப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது. ஆனால் கர்ப்பிணிப் பெண்களுக்கு அவை கூடவே கூடாது.

ஃ சீரகத்தைச் சிறுஞ்சீரகம் என்றும் சோம்புவைப் பெருஞ்சீரகம் என்றும் சௌ சௌ என்பதைச் சீமைக் கத்திரிக்காய் என்றும் உள்ளி என்பதைச் சீமை வெங்காயம் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

ஃ சென்னையில் உள்ள மணிமேகலைப் பிரசுரம் 'பிரபலமானவர்களின் விலாசங்கள்' என்ற பெயரில் நூல் ஒன்றை பல பதிப்புகளாக வெளியிட்டு வருகிறது. அதில் நான்காயிரத்திற்கும் அதிகமான பிரபலங்களின் முகவரிகள் உள்ளன. திருமண அழைப்பிதழ்கள் அனுப்பும் பிரபலமானவர்களுக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

ஃ கார்களில் பயணம் செய்வது சந்தோஷத்தை அளிக்கிறது. எனவேதான் அதற்கு 'Pleasure' எனப் பெயர் சூட்டினார்கள் போலும்!

ஃ ஒரு கோழிமுட்டை ஒரு காசு விலை இருந்தபோது ஒரு இலட்சம் ரூபாய்க்கு கோழி முட்டைகள் வாங்கிக் கட்டப்பட்ட வீடுதான், காரைக்குடி ஆயிரம் ஜன்னல்வீடு

ஃ அம்மான் பெண்டிர் என்பது அம்மா முண்டி என்றும் அண்ணன் பெண்டிர் என்பது அண்ண முண்டி என்றும் சித்தப்பார் பெண்டிர் என்பது சித்தப் பண்டி என்றும் மருவி நம்மில் இன்றும் பேசப்படுகிறது.

ஃ காலணிக்கு மிதியடி, செருப்பு, பாதரட்சை எனப் பல பெயர்கள் இருக்கும்போது மனிதனுக்குப் பல பெயர்கள் இருப்பது தவறில்லைதான்.

ஃ பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது என்கிறார்கள் சிலர். கணவனும் மனைவியும் வேலைக்குப் போய் பொருளீட்டினாலும் வாழ்க்கைச் செலவைச் சரிக்கட்ட முடியவில்லை என்கிறார்கள் பல தம்பதியர்.

ஃ பல பணக்காரர்கள் தங்கள் உடைமைகளைப் பாதுகாக்க நாய்களை வளர்த்து வருகிறார்கள். அந்த வகையில் ஒரு நாய்க்கு மாதம் ரூ. 1000/- வரை செலவு செய்கிறார்கள்.

— எல். சுந்தரம்

உங்கள் குரல்

'ரகுபதி என்றும் வாழ்க' என்ற ஆசிரியரின் கட்டுரை நம் சமூகத்தின் அருமை பெருமைகளை தெள்ளத் தெளிவாக விளக்குவதுடன் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களின் பண்பு நலன்கள் மற்றும் வாழ்க்கை விவரங்களை சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் நலன் பேணும் அமைச்சர்களாக மத்திய அரசில் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களும் தமிழக அரசில் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களும் இருந்து தொண்டாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது.

நா. இராமநாதன்
ஆ. முத்துப்பட்டணம்

'ரகுபதி என்றும் வாழ்க' என்ற ஆசிரியர் வி. என். சிடி. அவர்களின் கட்டுரையைப் படித்தேன். சுவைத்தேன். வி. என். சிடி. அவர்களின் பேச்சுப் போலவே அவர்களின் எழுத்தும் தெளிந்த நீரோடைபோல இருக்கிறது.

கட்டுரை நூல்கள் பலவற்றை நான் படித்திருக்கிறேன். இந்தக் கட்டுரையைப் பொறுத்தவரை நல்ல கட்டுரைக்கு இது ஒரு சான்று. நகரத்தார் சார்பில் அரசியல் பிரமுகர்களைப் போற்றிப் பாராட்டும் ஆசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

அழ. சோமசுந்தரம்
வேந்தன்பட்டி

பனையபட்டியில் சுப. அ. வீடு என்றாலே நடராஜ அண்ணன் அவர்கள் நினைவுதான் வரும். நல்ல பண்பாளர். பெருந்தகை. அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

நா. இராமநாதன்
ஆ. முத்துப்பட்டணம்

படங்கள் நிறைந்த பத்திரிகைகளில் ''நகரத்தார் குர''லும் ஒன்று. கண்ணதாசனின் பெருமைகளை செய்திகள் மூலமும் படங்கள் மூலமும் கடந்த இரண்டு மாதங்களாக வெளியிட்டு அவருக்குப் புகழ் சேர்த்துள்ள ''குர''லுக்கு நன்றி.

வே. லெட்சுமணன்
காரைக்குடி

ஏப்ரல்' 92 இதழ் முழுவதையும் படித்தேன். நல்ல தமிழில் அவசியமான செய்திகளையும் அருமையான கட்டுரைகளையும் ஏராளமான படங்களையும் வெளியிட்டு நம்மினத்திற்குப் பெருமை சேர்த்திருப்பது பாராட்டுக்குரியது. வாழ்க ''நகரத்தார் குரல்'' வளர்க அதன் தொண்டு!

வி. சிவராமன்
சென்னை

காரைக்குடியில் கார்த்திகை விழா

காரைக்குடி முத்துப்பட்டணம் ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் கார்த்திகை விழா 6-4-92 மாலை சிறப்பாக நடைபெற்றது. திரு. கா. அரு. மீனாட்சிசுந்தரம் வரவேற்றார். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் ''முருகன் பெருமை'' பற்றி உரையாற்றினார். பஜனை நடைபெற்றது. உபயதாரர் திரு. சி. இராமசாமி நன்றி கூறினார்.

அடிமைத்தனத்தை வெறுத்தவர் !

பள்ளத்தூரில் ஒரு வேலைக்காரப் பையனிடம் இரண்டு பைகளைத் தூக்கிவரச் செய்து நான் முன்னே நடந்து வந்து கொண்டிருந்தேன். எதிரில் எதிர்பாராத விதமாக டாக்டர் வ சுப. மாணிக்கனார் வந்தார். நான் வணக்கம் தெரிவித்தேன். என் நிலையையும் கூலி ஆள் பிடித்து நான் பைகளைக் கொண்டுவருவதையும் பார்த்த அவர் அந்த இடத்திலேயே-

''அடிமைக் காலத்தில் உரிமையாய் வாழ்ந்தோம் உரிமைக் காலத்தில் பிறரை அடிமையாக்கி வாழ்கிறோம்'' என்றார்.

நான் அன்றுமுதல் இன்றுவரையில் என்னுடைய பொருட்களை நானே சுமந்து வரும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகிறேன்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(மேலைச்சிவபுரியில் 20-4-92 அன்று நடைபெற்ற வ. சுப. மாணிக்கனார் அறக்கட்டளைத் தொடக்க விழாவில்.)

பெருமையில்லாத மனிதர் !

டாக்டர் வ. சுப. மாணிக்கனார் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரான செய்தியை பத்திரிகையில் பார்த்து விட்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க காரைக்குடியில் உள்ள அவரது கதிரகம் இல்லம் சென்றேன். அவரைச் சந்தித்து ''தாங்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தரான செய்தியை...'' என்று பேச்சைத் தொடங் கியபோது ''உடனே ஒரு மாலையை வாங்கிக் கொண்டு வந்து விட் டாய். அப்படித்தானே?'' என்று கேட்டுவிட்டு, ''அந்த மாலையை பண்டிதமணி படத்திற்குப் போடு'' என்றார். நானும் அதன்படியே செய்தேன். அவர் தன் குருமீது கொண்டிருந்த பக்தியை அப்போது உணர முடிந்தது. பெரிய பதவி கிடைத்தபோதிலும் எப்போதும் போலிருந்த அவரது முகத்தோற்றம் எனக்குக் கம்பனின் 'காதலுற் றிலன்' என்ற வரியையும் இராமரின் உருவத்தையுமே காட்டியது.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(மேலைச்சிவபுரியில் 20-4-92 அன்று நடைபெற்ற செம்மல், முனை வர் வ. சுப. மாணிக்கனார் அறக் கட்டளைத் தொடக்க விழாவில்.)

''செய்வதைச் சொல்; சொல்வதைச் செய்'' என்றார் காந்தி யடிகள். அதை வாழ்வில் கடைப் பிடித்தவர் முனைவர், செம்மல் திரு. வ. சுப. மாணிக்கனார்.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

"என் தந்தை, உள்ளத்தில் கண்ணீர் வடிப்பார்"

நான் கல்லூரியில் படித்தபோது ஊர் சுற்றினேன். என் தாயார் அதுபற்றி என் தந்தையிடம் புகார் செய்தார். அதற்கு என் தந்தையார் ''ஊர் சுற்றுகிறவனைக் கண்டிக்காதே!'' என்றார்.



எனது அய்த்தான் என் தந்தையிடம் ''கண்மணியும் ஏதோ எழுதுகிறான்... அவனுக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடுங்கள்'' என்றார். அதற்கு அவர் ''கற்றுக் கொடுத்து வருவதில்லை-கவிதை; என் குழந்தைகள் என் சொத்துக்களுக்கு மட்டும்தான் வாரிசு'' என்றார்.

என் தந்தையார், ஊர் அடங்கியபின் நடு இரவில் உள்ளத்தில் கண்ணீர் வடிப்பார். அவர் குடித்தார் என்பது உண்மை. அதில் நீந்தியது இல்லை. கவலைகளை மறப்பதற்கு மருந்தாய் அதனைப் பயன்படுத்தினார். அவர் நட்பால் பட்ட கடன் கொஞ்சநஞ்சமல்ல. அவருக்குக் கடைசிவரை மதுதான் தோழன்.

— கண்மணி சுப்பு
(கவியரசர் கண்ணதாசனின் புதல்வர்)

(சேலத்தில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில்)

திருமணம்

காரைக்குடி திரு. சுப. கதி. உ. ஆறுமுகம் செட்டியாரின் பேத்தியும் திரு. இராமநாதனின் புதல்வியுமான செல்வி காவேரி என்ற சாந்திக்கும் புதுவயல் திரு. அரு. ப. மு. ராம. ந. இராமசாமிச் செட்டியாரின் புதல்வன் செல்வன் நடேசன் என்ற செல்வத்திற்கும் 15-4-92 அன்று காரைக்குடி அறுபத்து மூவர் மடத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

பனையப்பட்டி திரு. சுப. அ. சொக்கலிங்கம் செட்டியார் பேரனும் திரு. சொ. பழநியப்பனின் புதல்வனுமான செல்வன் அண்ணமலை B.A.க்கும் நச்சாந்துபட்டி திரு. வீர. மு. சுப. முத்தையா செட்டியார் புதல்வி செல்வி மீனாட்சி என்ற சரோஜா B.Com.க்கும் நச்சாந்துபட்டியில் 20-4-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமண விழாவில் தொழிலதிபர்கள் வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

''செட்டிநாட்டை எப்போதுமே மறக்கமுடியாது''

நான் தஞ்சாவூரில் பிறந்தவள். என்னைச் செட்டிநாடு அரசர்கள் வளர்த்தார்கள். செட்டிநாட்டை நான் எப்போதுமே மறக்க முடியாது.

அந்தக் காலத்தில் '' மணி மகுடம் '' '' உதயசூரியன் '' போன்ற தி. மு. க. நாடகங்களில் நான் நடித்தேன். அப்போது கவியரசர் கண்ணதாசன் தன்னுடைய '' மாலையிட்ட மங்கை '' படத்தில் என்னை முதன் முதலில் அறிமுகப்படுத்தினர்.

கலை உலகில் '' உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது '' என்று சொல்லி கண்ணதாசன் என்னை அறிமுகப்படுத்தினர். கண்ணதாசன் இல்லையென்ருல் என்னுல் இந்த அளவுக்கு வாழ்வில் உயர்ந்து இருக்க முடியாது. அவருடை ஆசி எனக்கு நிறைய இருக்கிறது.

என்னுடைய ஆசையெல்லாம் கடைசிவரை நடித்துக்கொண்டே இருக்க வேண்டும்; சாகும் வரை நடித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பது தான்.

— நடிகை மனோரமா

(சேலத்தில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் 'அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே' என்ற தலைப்பில் பேசியது)

கண்ணதாசனுக்கு அமைச்சர் செல்வகணபதி புகழஞ்சலி

''காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசன் நினைவாக மணி மண்டபம் கட்டப்பட்டு, திறக்கப் படாமல் உள்ளது. அதைத் திறந்துவைக்க அமைச்சர் முயற்சிகளை மேற்கொள்ளக் கேட்டுக் கொள்கிருேம். அத்துடன் மதுரையில் கண்ணதாசன் நினைவாக் சிலை ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்து வருகிருேம். இவ் விழாக களில் தமிழக முதல்வர் கலந்து கொண்டு திறந்து வைக்கப்

கவிஞர் மதுவுக்கு எஜமானன்!

கண்ணதாசனைப்போல கம்பீரமான கவிஞன் இன்று யாரும் இல்லை. படிக்காதவர்கள்கூட அவரது பாடல்களைக் கேட்டு ரசிக்கிறார்கள்.

கண்ணதாசன் எந்த நேரத்திலும் யாருக்கும் பயப்பட்டதில்லை. அவர் எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அத்துறையில் முதலிடத்தில் இருப்பார்.

கடவுளை விமர்சனம் செய்து எழுதிய கவிஞன் உலகிலேயே கண்ணதாசன் ஒருவர்தான்.

மதுவுக்கு சிலர் அடிமையானதுண்டு; சிலர் நண்பரானதுண்டு; ஆனால் கவிஞர் மதுவுக்கு எஜமானனாகிவிட்டார்.

எத்தனை கவிஞர்கள் பிறந்தாலும் கவிஞர் என்பது கவியரசர் கண்ணதாசனுக்கு மட்டுமே பொருந்தும்.

— பாடலாசிரியர் நா. காமராசன்

(சேலத்தில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில்)

பெரிதும் விரும்புகிறோம்'' என கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற மாநிலத் தலைவர் 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் சேலத்தில் 19-4-92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

விழாவில் கலந்து கொண்டு தமிழக அமைச்சர் மாண்புமிகு செல்வகணபதி பேசுகையில் —

தமிழ்நாட்டில் எத்தனையோ கலைஞர்கள் கவிஞர்கள் வாழ்ந்து மறைந்துள்ளனர். ஆனால் கண்ணதாசன்போல் மக்களைக் கவர்ந்தவர்கள் யாரும் இல்லை. இன்னும் கிராமங்களில் நகரங்களில் அவரது பாட்டுக்களை ரசித்துக் கேட்கிறார்கள்.

கண்ணதாசன் மணி மண்டபத்தைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக முதல்வரிடம் எடுத்துக் கூறி தேவையான நடவடிக்கைகளை எடுக்க முயற்சி செய்வேன்.

- இவ்வாறு அவர் கூறினார்.

அரிமழத்தில் இலவச மருத்துவ முகாம்

அரிமழம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அரிமழம் தே. முருகப்ப செட்டியார் அறக்கட்டளையின் சார்பில் 1-3-92 ஞாயிறன்று தே.முரு. உமையாள் ஆச்சி நினைவு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மருத்துவத் துறை இணை இயக்குனர் டாக்டர் காப்டன் ந. இராமசுப்பு தலைமையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் கா. நாகப்பன் அவர்கள் யேற்படி முகாமைத் தொடங்கி



சேலம் கண்ணதாசன் விழாவில் ஏழைப் பெண் கண்ணாத் தாளுக்கு ஜவஹர் மில்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. பழ. விவேகானந்தன் தையல் இயந்திரம் வழங்கும் காட்சி. அருகே (இ—வ) திரு. வீர. இராமநாதன், அமைச்சர் திரு. செல்வகணபதி, திரு. முக்தா சீனிவாசன், திரு. வி. என். சிடி., திரு. அரு. நாகப்பன், திரு. சோ. சோலையப்பன்.

வைத்தார்கள். பலர் வாழ்த்துரை வழங்கினர்.

கண், காது, மூக்கு, தொண்டை, பல், தோல், அறுவைச் சிகிச்சை பொது மருத்துவம், மகளிர் நலம், குழந்தைகள் நலம், காச நோய் முதலிய பல துறைச் சிறப்பு மருத்துவர்கள் 10 பேர் சிகிச்சை அளித்தார்கள். 317 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். எல்லோருக்கும் மருந்து இலவசமாக வழங்கப் பெற்றது.

அரிமழத்தில் தெப்பத் திருவிழா

அரிமழம் பெரிய பொற்குடையான் ஊருணியில் 18-4-92 சனிக்கிழமை இரவு 9-30 மணிக்கு தெப்பத் திருவிழாச் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழாவில் தமிழக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களும் துணை வேந்தர் முனைவர் திரு.கே. நாகப்பன் அவர்களும் பெரும் திரளான மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதுசமயம் முனைவர் திரு. கே. நாகப்பன் தலைமையில் தெப்பத் திருவிழா டிரஸ்டி திரு. ச. அ. சோம. அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. திரு. அண்ணாமலை செட்டியாரைப் பலர் பாராட்டிப் பேசினார்கள்.

"நகரத்தார்கள் நல்லவர்கள்"

நகரத்தார்கள் நல்லவர்கள்; வல்லவர்கள். தமிழுககும் இலக்கியத்திற்கும் சமயத்திற்கும் இறைப் பணிக்கும் கல்விக்கும் மிகுந்த தொண்டு செய்தவர்கள். நகரத்தாரின் பணிகள் போற்றிப் புகழக் கூடியவை.

— ம. பொ. சிவஞானம்

இளமைக் காலம் மிகவும் மென்மையானது; பறவை போன்றது. அதைக் கையில் வைத்து மிக அழுத்தமாகப் பிடித்தால் நசுங்கி விடும்; துன்பப் படும். கொஞ்சம் விரித்துப் பிடித்தால் அது பறந்து விடும். இளைஞர்கள் எண்ணங்களை ஒரு முகப்படுத்தி கட்டுப்பாட்டுடன் வாழ்வதுதான் சிறந்தது.

— நாவலாசிரியை சிவசங்கரி

(காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகமும் காரைக்குடி சுழற் குழுவும் 6-4-91 அன்று நடத்திய நிறுவனர் நினைவு நாளில் பேசியது)

தொகுப்பு : என். பி. இராமசாமி

திண்டுக்கல்லில் திருமண மண்டபம்

திண்டுக்கல்லில் திருமண மண்டபம் கட்டுவதற்கு நாகல் நகரில் நத்தம் ரோடு குடகனுறு இல்லத்திற்கு எதிரே சுமார் 7300 ச. அடி. மனை இடம் வாங்கப் பெற்றிருப்பதாகவும் மேற்படி இடத்தில் 26-1-92 அன்று காலை சுபமுகூர்த்த வேளையில் திண்டுக்கல் நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. முப. மு. பழனியப்ப செட்டியார் அவர்களால் தச்சு செய்யப் பெற்றிருப்பதாகவும் இந்த நற்பணிக்கு நகரத்தார்கள் தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டுமாய் சங்கச் செயலாளர் திரு. ஆ. வ. இராமநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இயற்கை எய்தினர்

கர்நாடக மாநிலம் சிக்மகளூர் நகரத்தார் சங்கத் தலைவரும் இராங்கியத்தைச் சேர்ந்தவர்களுமான மு. சொ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தமது 68 ஆவது வயதில் 1-4-92 அன்று கடலூரில் இயற்கை எய்தினார்கள். அன்னாரது



இறுதிச் சடங்குகள் 2-4-92 அன்று இராங்கியத்தில் நடைபெற்றன. இவர்கள் கடந்த 40 ஆண்டுக் காலமாக கர்நாடக மாநிலம் எக்கட்லு – சந்திராப்பூர் காப்பித் தோட்டத்தில் பொது மேலாளராகப் பணியாற்றி வந்தார்கள். இவர்களுக்கு மனைவியும் மூன்று புதல்வர்களும் மூன்று புதல்விகளும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி.என்.சிதம்பரம்.

பதிமூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 11-9-1927

மறைவு : 25-4-1979

திருமதி இராம. மெய்யம்மை ஆச்சி


முன்னாள் இயக்குநர், ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட்.,

பெயரன் பெயர்த்தி திருமண ஆண்டிது
தூயநின் திருவடியது பணியும் சேயர்
பணியர் சேர்ந்தநல் சுற்றம் செழிப்புற
அன்னை நின்னருள் வேண்டுதும்.

என்றும் தங்கள் நினைவைப் போற்றும்

மகன் - இராம அருணாசலம்

மருமகள், மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்
அலுவலர்கள்.



சேலம் கண்ணதாசன் விழாவில் 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' திரு. வி.என். சிதம்பரம் செட்டியார் கூறுவதை ஆர்வமாகக் கேட்கிருர் நடிகை மனோரமா.



சேலம் கண்ணதாசன் விழாவில் பட்டி மன்ற நடுவர் 'மக்கள் விஞர்' திரு, அரு. நாகப்பன் உரையாற்ற அருகே காவல் துறை கண்காணிப்பாளர் திரு. ஏ. சுப்பிரமணியமும், திரு. வி.என்.சிடி.யும் உள்ளனர்.